**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

## OS 144/2019

**09.10.2025.**

## PW- 1

**வா.சா.1. ரவீந்திரன், த/பெ. கண்ணையன் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1 மற்றும் 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி ராஜேந்திரன் தான் குடும்பத்தில் மூத்தவர் என்றால் - சரிதான். 1980 முதல் 1985 வரை தமிழ்நாடு அரசு பாடப்புத்தகத்தில் டெலிவரி பாயாக வேலை செய்தார் என்றால் - இல்லை. 1980 முதல் 1985 வரை 1ம் பிரதிவாதி டெலிவரி பாயாக வேலை பார்த்து வந்த விவரம் எனக்கு தெரியும் என்றும் வழக்கிற்காக இல்லை என்று சொல்கிறேன் என்றால் - சரியல்ல. 1ம் பிரதிவாதி வெளிநாட்டில் எத்தனை ஆண்டுகள் இருந்தார் என்றால் - 2 முதல் 3 வருடங்கள் வேலை பார்த்தார். 1ம் பிரதிவாதி வெளிநாட்டில் 15 ஆண்டுகள் வேலை பார்த்து வந்தார் என்றால் - தவறாகும். நான் 1991ல் ஓட்டுனராக பணிப்புரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். அதேபோல் எனது சகோதரர் 4ம் பிரதிவாதி தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுனராக வேலை பார்த்து வருகிறார் என்றால் - சரிதான். 1991க்கு முன்பு எனது வருமானத்தை காட்டக்கூடிய ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் - சரிதான். என் தகப்பனாருக்கு பூர்வீக சொத்து கிடையாது என்றால் - சரியல்ல. இருக்கிறது. எனது தகப்பனாருக்கு பூர்வீக சொத்து இருக்கிறது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் - இல்லை. என் தகப்பனாருக்கு தாவா 1, 2 அயிட்ட சொத்துக்களை வாங்குவதற்கு வருமானம் எதுவும் கிடையாது என்றால் - சரியல்ல. 1ம் பிரதிவாதியின் வருமானத்தை கொண்டு தாவா 1வது அயிட்ட சொத்து கிரயம் வாங்கப்பட்டது என்றால் - சரியல்ல. 1 அயிட்ட சொத்து பூர்வீக சொத்து. பூர்வீக சொத்து எந்த சர்வே நம்பரில் உள்ளது என்றால் - சர்வே நம்பர் 283 ஏ/4 பி, 283 ஏ/5 ஏ, 283 ஏ/5 பி ஆகும். சர்வே நம்பர் 283 ஏ/4 பி, 283 ஏ/5 ஏ சொத்துக்கள் 1984 ல் கிரயம் வாங்கப்பட்டது. சர்வே நம்பர் 283 ஏ/5 பி மற்றும் 283 ஏ/6 பி பூர்வீக சொத்து என்று சாட்சி கூறுகிறார். தாவா 1வது அயிட்ட சொத்தானது 1ம் பிரதிவாதியின் வருமானத்தை கொண்டு எந்த வருமானமும் இல்லாத என் அப்பாவின் பெயரில் வாங்கப்பட்ட சொத்து என்றால் - சரியல்ல. 1ம் பிரதிவாதியை தவிர்த்து என் அப்பாவிற்கோ எனக்கோ 4ம் பிரதிவாதிக்கோ எந்தவிதமான வருமானமும் கிடையாது என்றால் - சரியல்ல. எங்களது பொது வருமானத்தை கொண்டு தாவா சொத்துக்கள் கிரயம் வாங்கப்படவில்லை என்றால் - சரியல்ல. தாவா சொத்துக்கள் அனைத்தும் 1ம் பிரதிவாதியின் வருமானத்தை கொண்டு என் தகப்பனார் பெயரில், பெயர் இரவலாக வாங்கப்பட்ட சொத்து என்றால் - சரியல்ல. 1ம் பிரதிவாதி தன் தகப்பனார் பெயரில் வாங்கிய சொத்தை 4 மற்றும் 5ம் பிரதிவாதி பெயரில் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றால் - அது தவறாகும். 1984ல் தாவா சொத்தை கிரயம் வாங்குவதற்கான வருமானம் எனக்கோ 2ம் பிரதிவாதிக்கோ கிடையாது என்றால் - சரியல்ல. தாவா சொத்துக்கள் எதுவும் நான் சொல்வதுபோல பூர்வீக சொத்துக்கள் இல்லை என்றால் - சரியல்ல. அதனால் தான் பூர்வீக சொத்துக்கள் என காட்டக்கூடிய ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் - சரியல்ல. பூர்வீக சொத்தின் மூலமாக வருமானம் இருந்தது என்பதற்கான ஆவணமும் தாக்கல்

செய்யவில்லை என்றால் - சரியல்ல. எதிர் வழக்குரையில், பாரா 7ல் காசிநாதன் மகன்கள் கோவிந்தராஜ், இளம்பரிதி, சூர்யமூர்த்தி ஆகியோர்களுக்கு சொந்தமான சொத்துக்களை கிரயம் பெறப்பட்டு அது பதிவு செய்யபடாமல் இருந்து வரும் விவரம் சொல்லப்பட்டுள்ளது என்றால் - அந்த விவரம் தவறாகும். சர்வே எண்கள். 537/5, 540/6, 543/2 சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் வருமானத்தை கொண்டு வாங்கப்பட்ட சொத்துக்கள் என்றும் அந்த கிரய ஆவணங்கள் பதிவு செய்யப்படவில்லை என்ற விவரமும் எதிர் வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் - அது தவறாகும். எனது வழக்குரையில் கண்ட சொத்துக்கள் எனது பெயரில் கிரயம் பெற்றுள்ளேனா என்றால் - இல்லை. இந்த வழக்கு நிலுவையில் இருக்கும்போது ஆவண எண்.557/2023, 03.02.2023 ல் கோவிந்தராஜ் என்பவரிடமிருந்து கிரயம் வாங்கியுள்ளேன் என்றால் - சரியல்ல. அந்த சொத்தை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் - சரியல்ல. அப்படியொரு சொத்தையே நான் வாங்கவில்லை. 1ம் பிரதிவாதி தான் பணம் கொடுத்தார் என்றும் நான் உரிமையில்லாத நபரிடம் சொத்தை கிரயம் வாங்கியுள்ளேன் என்றால் - சரியல்ல. மன்னார்குடி விழல்காரதெருவில் ஒரு வீடு உள்ளது அதன் சர்வே எண். நினைவில்லை. என் சொந்த வருமானத்தை கொண்டு மேற்படி சொத்தை கிரயம் வாங்கியுள்ளேன். மேற்படி சொத்தை 2007 ல் இடம் வாங்கி பின் கடன் பெற்று வீடு கட்டினேன். 1ம் பிரதிவாதியின் வருமானத்தை கொண்டு கட்டப்பட்ட வீடு என்றால் - சரியல்ல. காரைக்கோட்டை கிராமத்தில் கந்தசாமி என்பவருக்கு சொந்தமான 200 குழி உள்ளது என்றால் - சரிதான். 1ம் பிரதிவாதி என் தந்தைக்கு பணம் அனுப்பிய வகையில் 2ம் பிரதிவாதி பெயரில் நான் கிரயம் வாங்கிக்கொடுத்தேன் என்றால் - அது தவறாகும் 2ம் பிரதிவாதி சொந்த பணத்தை கொண்டு கிரயம் வாங்கிகொண்டார். 2ம் பிரதிவாதிக்கு எந்த வருமானமும் கிடையாது என்றும் 1ம் பிரதிவாதியின் பணத்தை கொண்டுதான் கிரயம் வாங்கப்பட்டது என்றால் - சரியல்ல. 2ம் பிரதிவாதி வெளிநாட்டில்வேலை பார்த்து அங்கு குடியுரிமை பெற்று அவர் பெயரில் கிரயம் வாங்கிய சொத்தாகும். 2ம் பிரதிவாதியின் முகவர் என்ற பெயரில் நான் சொத்தை என் பெயரில் முறையற்ற வகையில் மாற்றியுள்ளேன் என்றால் - சரியல்ல. விழல்காரத்தெரு மற்றும் காரக்கோட்டையில் ஆகிய இடங்களில் உள்ள சொத்துக்களை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் - சரியல்ல. அது 2, 3 பிரதிவாதிகளின் தனிப்பட்ட சொத்தாகும். நான் மேற்படி 2, 3 பிரதிவாதிகள் பெயரில் தனிப்பட்ட முறையில் சொத்து கிரயம் பெறப்பட்டது எனதெரிவித்து பதில் எதிர் வழக்குரையில் தாக்கல் செய்யவில்லை என்றால் - சரியல்ல. மேற்கண்ட சொத்துக்களை இந்த வழக்கில் சேர்க்கக்கூடாது என்பதற்காகவே தனிப்பட்ட வருமானத்தை கொண்டு பெறப்பட்ட சொத்துக்கள் என்று நான் பொய்யாக தெரிவிக்கிறேன் என்றால் - சரியல்ல. ஆகவே என்னுடைய வழக்கானது பகுதி பாகப்பிரிவினை என்ற தோஷத்திற்காக தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் - சரியல்ல. தாவா 1வது அயிட்ட சொத்து வழக்கு தாக்கல செய்வதற்கு முன்பாகவே 4, 5 பிரதிவாதிகள் தனித்த அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் - சரியல்ல. ஆகவே வழக்கில் நான் செலுத்தியுள்ள நீதிமன்ற முத்திரைக்கட்டணம் தவறு என்றால் - சரியல்ல. 09.04.2019 ம் தேதியன்று ஆவண எண். 561/2019 மற்றும் 562/2019 ஆகிய சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் வருமானத்தை கொண்டு வாங்கப்பட்டதால் அதில் எனக்கு எந்த பாகமும் கிடைக்கக்கூடியது அல்ல என்றால் - சரியல்ல.

தாவா 1 வது அயிட்ட சொத்து பொது சொத்து என சொல்வது ஏற்புடையது அல்ல என்றால் - சரியல்ல.

வழக்குரையில் நான் கோரியுள்ள எந்த பரிகாரமும் கிடைக்கக்கூடியது அல்ல என்றால் - சரியல்ல.

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஒம்/- எஸ்- முத்துராமன்,<br>
சார்பு நீதிபதி,<br>
மன்னார்குடி.